O/L 2026/88/S-I,II

සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved]

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

88 S I

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය 2026 පෙරහුරු පරීක්ෂණය
கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சை 2026 முன்னோடிப் பரீட்சை
General Certificate of Education (Ord.Level) Examination, 2026 Preliminary Exam

නිර්මාණකරණය හා ඉදිකිරීම් තාක්ෂණවේදය I, II
வடிவமைப்பும் நிருமாணத் தொழிநுட்பவியலும் I, II
Design & Construction Technology I, II

පැය තුනයි
மூன்று மணி
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10
மேலதிக வாசிப்புக்கான நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 min

மேலதிக் வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்தி, வினாத்தாளை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்தல், எழுதும் போது முன்னுரிமை அளிக்க வேண்டிய கேள்விகளை ஒழுங்கமைத்துக் கொள்ளுங்கள்.

அறிவுறுத்தல்கள் :

- சகல வினாக்களுக்கும் விடையளிக்க.
- 1 முதல் 40 வரையிலான வினாக்களுள் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளிலிருந்து சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில், ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள வட்டங்களிலிருந்து நீங்கள் தேர்ந்தெடுத்த விடையின் எண்ணுக்குரிய வட்டத்தில் ஒரு குறியை (×) இடவும்.
- விடைத்தாளின் பின்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஏனைய வழிமுறைகளைக் கவனமாகப் படித்து, அவற்றைப் பின்பற்றவும்.

1. நீள் வளையமொன்றில் காணப்படும் குவியங்களின் எண்ணிக்கை,
   1. 1 2. 2 3. 3 4. 4
2. மூடியும் அடிப்பாகமும் இல்லாத ஒரு உருளையை விரிக்கும்போது, கிடைப்பது,
   1. சதுரம் 2. சாய்சதுரம் 3 வட்டம் 4. செவ்வகம்
3. A. ——— – ——— – ——— B. -
   C. ——————————— D. ———————————
   மேற்கண்ட கோடுகளில் மையக் கோட்டைக் குறிக்கப் பயன்படுவது,
   1. A 2. B 3. C 4. D
4. ஒரு பென்சிலில் 2H எனக் குறிக்கப்பட்டிருப்பிருப்பின், அது குறித்து நிற்பது,
   1. பென்சிலில் உள்ள அழிப்பானின் விவரக் கூற்று.
   2. பயன்படுத்தப்பட வேண்டிய கவராயத்தின் விவரக் கூற்று.
   3. பென்சின் முனையின் விவரக் கூற்று.
   4. பென்சில் பலகையின் விவரக் கூற்று.
5. சமனற்ற இரு வட்டங்களுக்கிடையிலான தொடலி ஒன்றை வரையும் போது தேவைப்படுவது யாது?
   A. இரண்டு வட்டங்களின் ஆரை
   B. இரண்டு வட்டங்களின் மையங்களுக்கு இடையேயான தூரம்
   C. இரண்டு வட்டங்களின் ஆரைகளின் கூட்டுத்தொகை
   1. A மட்டும் 2. B மட்டும் 3. A மற்றும் B மட்டும் 4. A,B மற்றும் C ஆகியன

Past Papers Wiki

6. படத்தில் காட்டப்பட்டுள்ளது நிமிர் வரைய செய்கோண சமவளவுத் தோற்றமொன்றாகும் ஒரு சம கோண முறையில் முகப்பு நிலைப் படத்தைக் காட்டக் கூடிய உருவைத் தெரிக.



1.



2.



3.



4.



7. உருவில் ABCD எனக் காட்டப்பட்டுள்ளது ஒரு கூம்பு அதன் அச்சின் வழியே வெட்டப்படும் விதமாகும். இங்கு ABCD கோட்டின் வழியே வெட்டும் போது பெறப்பட்டும் கேத்திர கணித தள உருவத்தின் வடிவம் யாது?
   1. வட்டம், நீள்வளையம், பரவளையம், அதிபரவளையம்
   2. வட்டம், நீள்வளையம், அதிபரவளையம், பரவளையம்
   3. அதிபரவளையம், வட்டம், நீள்வட்டம், பரவளையம்
   4. அதிபரவளையம், நீள்வளையம், பரவளையம் வட்டம்



8. உருவில் காட்டப்பட்டுள்ள குருக்கு வெட்டப்பட்ட அறுகோண எரியம் ஒன்றின் விரியலை சரியாகக் காட்டும் உரு,



1.



2.





3.



4.



9. பழங்கால இலங்கையில் நீரப் பூ தொழில்நுட்பம் உயர் மட்டத்தில் இருந்தது என்பதற்கு வழங்கப்படக்கூடிய மிகச்சிறந்த சான்று பின்வருவனவற்றுள் எது?
1. சொரபொர வாவி 2. பராக்கிரம சமுத்திரம் 3. ஆயிரம் கால் மண்டபம் 4. சீகிரிய குன்று

10. 10. கட்டிட நிர்மாணத் தொழில்துறையில் கொன்கிரீட்டை வலுவூட்டுவதற்காக வலுவூட்டும் கம்பிகள் பயன்படுத்தப்படுகின்றன. பின்வருவனவற்றுள் வலுவூட்டும் கம்பி அல்லாதது எது?
1. நரம்புருக்குக் கம்பிகள் 2. மென் உருக்குக் கம்பி
3. முறுக்கப்பட்ட உருக்குக் கம்பி 4. 'L' வடிவ சட்டகம்

11. விழா மண்டபம் ஒன்றின் சுவர்களில் மிகவும் இலகுவாகவும் விரைவாகவும் நேர்த்தியாக்கல் வேலையை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான முறை எது?
1. தரை ஓடுகள் பதித்தல் 2. சுவர்கடதாசி அடரிடல்
3. வண்ணம் பூசுதல் 4. செயற்கைக் கற்கள் பதித்தல்

12. அகற்றப்பட்ட சில மரத்துண்டுகளில் கம்பி ஆணிகள் அறையப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. அவ்வாணிகளைப் பிடுங்கி அகற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடிய சுத்தியல் வகையைக் குறிப்பிடும் சரியான தெரிவைத் தேர்ந்தெடுக்க.
1. கவர்ச்சுத்தியல் 2. தட்டுப் பொல்லு
3. குண்டுதலைச் சுத்தியல் 4. குறுக்குத் தலைச் சுத்தியல்

13. வீட்டுச் குளியலறையில் நீர் முறையாக வடிந்து செல்வதற்காக அதன் சரிவை அமைத்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணமாகும்.
1. மட்டக் குழாய் 2. குஸ்தானம் 3. மூலை மட்டம் 4. சாய் மோர மூளை மட்டம்

14. கட்டுமானத் தளத்தில் தங்கியிருக்கும் தொழிலாளர்களுக்காக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள தற்காலிகக் கழிப்பறையின் கதவுக்காகப் பலகைகளைப் பொருத்துவதற்குப் பொருத்தமான மூட்டு வகை எது?
1. நாப்பொருந்து 2. படித்தள்ளுப் பொருத்து
3. நாவா தவாலிப்பு பொருத்து 4. சதுர விள்ம்புப் பொருத்து

15. வீடொன்றின் பிரதான கதவுத் தளத்தில் துளைக்கடைசல் (ஊடுருவு வேலைப்பாடு) செய்வதற்குரிய வேலைகளில் பெருமளவில் பயன்படுத்தப்படும் உளி வகை எது?
1. பக்க உளி 2. தட்டையான உளி 3. மூலை உளி 4. குழிவு உளி

16. தற்போது கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் நவீன பாணி வீடுகளில் பல்வேறு வடிவங்கள் மற்றும் அளவுகளிலான கூரை ஓடுகள் வேயப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். இவ்வாறு அவ்வோடுகளில் பல்வேறு வடிவங்களை உருவாக்க முடிவதற்குக் காரணம், ஓடுகள் உற்பத்தி செய்யப் பயன்படும் களிமண்ணின் எந்தக் குண இயல்பினால் ஆகும்?
1. நொருங்கும் தன்மை (Brittleness) 2. பிளாஸ்டிக்குத் தன்மை / இளகும் தன்மை (Plasticity)
3. மீள்தன்மை (Elasticity) 4. உருகும் தன்மை (Fusibility)

17. சுவர்களுக்குப் பூச்சு வேலை செய்வதற்குச் சுண்ணாம்பு பயன்படுத்தப்படுகின்றது. சுட்ட சுண்ணாம்பைப் பெற்றுக் கொள்வதற்கான இரசாயனத் தாக்கத்தைக் குறிப்பிடும் சரியான கூற்று எது?

1. $CaCO_3 \xrightarrow{\Delta} CaO + CO_2\uparrow$ 2. $CaO + CO_2 \xrightarrow{\Delta} CaCO_3\uparrow$

3. $CaCO_3 \xrightarrow{\Delta} CaO + CO_2\uparrow$ 4. $2CaO + Al_2O_3 \xrightarrow{\Delta} Ca_3(AlO_3)_2\uparrow$

18. நீளவாக்கு செங்கல் பாணியின் (Stretcher bond) படி கட்டப்பட்ட வகுப்பறைப் பிரிப்புச் சுவர் ஒன்றின் $1m^2$ ஐக் கட்டுவதற்குத் தேவையான சுட்ட செங்கற்களின் எண்ணிக்கை 120 கற்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்படிக் கட்டப்பட்ட சுவரின் உயரமும் நீளமும் முறையே 1.5m, 6m எனின், சுவரைக் கட்டுவதற்குத் தேவையான மொத்தக் கற்களின் எண்ணிக்கை எத்தனை?
1. 1000 2. 1080 3. 1100 4. 1050

19. வடிவமைப்பு வேலை ஒன்றுக்குப் பயன்படுத்தப்படும் 6 அங்குல அகலமுடைய பலகைத் துண்டொன்றை சாய்வு மூலை மட்டத்தின் உதவியுடன் சமனான 3 பகுதிகளாகப் பிரிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு பிரிக்கும் போது ஒரு பகுதிக்குரிய மில்லிமீட்டர் (mm) அளவு எவ்வளவாகும்?
1. 42 mm 2. 50 mm 3. 58 mm 4. 2. 62 mm

20. அலுவலக அறையொன்றின் இடத்தை அதிகபட்சமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாகவும், அங்குள்ள தளபாடங்களை (Furniture) அசைக்காமல் உரிய வேலைகளைச் செய்து செல்லக்கூடியதாகவும், இலகுவாகவும் விரைவாகவும் அமைப்பதற்குப் பரிந்துரைக்கப்படக்கூடிய கதவு எது?

1. நழுவு கதவு (Sliding Door)
2. கீல் கதவு (Hinged Door)
3. சுருள் கதவு (Roller Shutter Door)
4. கிளாம்ப் கதவு (Clamp Door)

21. சுற்றுலாக் காலத்தில் கடற்கரையைச் சார்ந்த பகுதியில் தற்காலிகமாக கபானா உணவகம் (Cabana restaurant) ஒன்றை அமைப்பதற்கு உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர். இதன் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் போது பின்வருவனவற்றுள் எதனைப் பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டும்?

1. இயங்கு சுமை பற்றி
2. நிலையான சுமை பற்றி
3. சுற்றாடல் சுமை பற்றி
4. ஏனைய சுமை பற்றி

22. தொழில்துறை ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களைச் சேமித்து வைப்பதற்காக மரத்தைப் பயன்படுத்திச் செய்ய எதிர்பார்க்கப்படும் ஆயுதப் பெட்டியொன்றைப் பூட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய இலகுவான பூட்டு முறை எது?

1. பந்துத் தாழ்ப்பாளைப் பயன்படுத்துதல்
2. கப்பித் தாழ்ப்பாளைப் பயன்படுத்துதல்
3. கொக்கித் தாழ்ப்பாளைப் பயன்படுத்துதல்
4. பிடிமானத்தைப் பயன்படுத்துதல்

23. கடுமையான காற்று வீசும் நாளொன்றில், வீட்டின் திறக்கப்பட்டிருந்த கண்ணாடிச் சன்னல், நிலைக் சட்டத்தில் பலமாக மோதி சில கண்ணாடித்துண்டுகள் உடைந்து நிலத்தில் விழுந்தன. இதற்கு அண்மையக் காரணம் (மிக முக்கியக் காரணம்) பின்வருவனவற்றுள் எதுவாக இருக்கலாம்?

1. சன்னல் பூட்டுப் போடப்படாமல் இருந்தமை
2. காற்றுப் கொக்கிஇடப்படாமல் இருந்தமை
3. சன்னல் கொக்கி இடப்படாமல் இருந்தமை
4. சன்னல் வளையம் பயன்படுத்தப்படாமல் இருந்தமை

24. மாணவர் விடுதித் தொகுதியொன்றில் சுகாதார வசதிகளைப் பேணுவதற்காகக் குழாய் வாயில்கள் (Taps) மற்றும் நீர்ப் பொழியி (Shower) அமைப்பொன்றை நிர்மாணிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இங்கு பிரதான நீர்க் குழாய்க்குப் பல குழாய் வாயில்களைப் (Taps) பொருத்துவதற்கு, இலகுவாகவும் செலவைக் குறைத்துக் கொண்டும் குழாய்களைப் பொருத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு சாதனம் (Fitting) எது?

1. டீ தாங்குகுழி
2. திருகுபிடி தாங்குகுழி
3. திருகுபிடி டீ தாங்கு குழி
4. வால்வு தாங்கு குழி

25. கிணற்றிலிருந்த நீரைப் பெற்றுக் கொள்ளும் போது நீர் முதல் மற்றும் மோட்டருக்கிடையிலான உரிஞ்சு குழாயினுள் (Suction line) நீரைப் பிடித்து வைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் வால்வு ஆவது,

1. பாத வால்வு
2. படலை வால்வு
3. பந்து வால்வு
4. நிறுத்து வால்வு

26. நீண்ட காலமாக பாவிக்கப்படாமல் இருந்த பாசு படிந்த செங்கல் சுவரொன்றை காரையிடுவதற்கு முதல் சுத்தம் செய்து கொள்வதற்காக பாவிக்கக் கூடிய தூரிகை வகை எது?

1. சாந்தகப்பை
2. கம்பித் தூரிகை
3. மணல் கடதாசி
4. முள் கரண்டி

27. திறந்த பொளி கழுந்து மூட்டு நிர்மாணிப்பின் போது, அந்த நிர்மாணிப்புக்காக பயன்படுத்தப்படும் மரப் பகுதியை சமமான மூன்று அளவிடைகளுக்கு பிரித்துக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும் உபகரணமாவது,

1. வரைகம்பு (Marking Guage)
2. பொளி வரைகம்பு / பொளி மாணி (Mortice guage)
3. வரை கத்தி (Marking Knife)
4. சிறிய சட்ட வாள் (Fret Saw)

28. யன்னல் சிறகொன்றை மரத்தினால் நிர்மாணிப்பதற்கு யன்னல் சட்டகத்திற்கு கண்ணாடி பொருத்துவதற்கான செயற்பாடுகளின் போது அவ்வேளை பகுதிகளை இறுக்கிக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்.

1. G இடுக்கி
2. T இடுக்கி
3. நிலை இடுக்கி
4. வால் இடுக்கி

29. மரத்தினால் நிலை ஒன்றை நிர்மாணிக்கும் போது கழுத்தின் பொளியை தயார் செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணத் தொகுதி,

1. பொளியிடுயுளி, தட்டுப் பொல்லு
2. பொளியிடுயுளி, கவர் சுத்தியல்
3. தரங்குளி, குண்டுத்தலை சுத்தியல்
4. பொளியிடுயுளி, வாரிங்டன் குறுக்குத் தலை சுத்தியல்

30. புறாவால் மூட்டின் கோணத்தை வரைந்து கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்.

1. வரைகம்பு
2. மூலைமட்டம்
3. வரைகத்தி
4. தரங்கு மூலைமட்டம்

31. நான்கு மாடி கட்டடத்தின் மூன்றாவது தளத்தை (Slab) இடுவதற்கு கொங்கிறீற்று கலவைக்கு அதிர்த்தி பயன்படுத்தி சோர்வு, வீழ்ச்சி பிரிசோதனை செய்வதற்கான காரணம் யாது?

1. கொங்கிறீற்றுக் கலவைக்கு பயன்படுததப்படும் நீரின் அளவை அளப்பதற்காக
2. கொங்கிறீற்றின் உறுதித்தன்மையை அளவிடுவதற்காக.
3. கொங்கிறீற்றுக் கலவை வெலை செய்யக் கூடிய தன்மையை அளப்பதற்காக.
4. கொங்கிறீற்றிலுள்ள பொருட்களின் உரிய அளவை அளப்பதற்காக.

32. பாரம்பரிய மரவேலைத் தொழிலில் அனேகமாக துளையிடும் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் உபகரணத் தொகுதி பற்றி கீழே விளக்கப்பட்டுள்ளது.

A. உளி, பற்சக்கர தடை துற்பபணம்

B. கைத்துளை அலகு, துறப்பண அலகு

C. பற்சக்கரத் தடை துறப்பணம், ஆவுகாரம்

D. துறப்பண அலகு, உளி

இங்கு A,B,C,D எழுத்திக்களில் சரியானவை,

1. A யும் B யும் 2. A யும் D யும் 3. B யும் C யும் 4. C யும் D யும்

33. கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு முன்பு மட்டம் காண்பதற்கு நேர்த்தியை (Level) பெறுவதற்கு முடியுமாக இருந்தும் குறுகிய நேரத்தில் பாரிய பிரதேசமொன்றின் கிடைத்தளமட்டத்தை பெறுவதற்கு பொருத்தமான உபகரணம்.

1. நீர்மட்டம் 2. திபோடைற்று 3. லேசர் மட்டம் 4. மட்டக்குழாய்

34. கட்டடமொன்றை நிர்மாணிக்கும் போது கொங்கிறீற்றுக் கலவை செய்வதற்குத் தேவையான மணலை அளப்பதற்கு மாணிப் பெட்டி பயன்படுத்தப்படுவதடன் சீமெந்து அளப்பதற்கு பயன்படுத்தப்படும் மாணிப் பெட்டியின் நீள, அகல, உயரம் முறையே காணப்படுவது.

1. 400mm x 350mm x 290mm 2. 400mm x 350mm x 250mm

3. 400mm x 250mm x 290mm 4. 400mm x 350mm x 300mm

35. வீட்டு வேலைத் தளமொன்றில் பாதுகாப்பு வேலைகளுக்காக ஒரு உத்தியோகத்தரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு கட்டுப்பாட்டு அதிகாரியினால் முடிவு செய்யப்பட்டது. வீட்டுத் திட்டத்தின் இறுதி மதிப்பீட்டை தயார் செய்யும் போது பாதுகாப்புச் செலவை சேர்க்கப்படுவது,

1. ஊழியர் செலவு 2. மேந்தலை செலவு 3. சாதாரண செலவு 4. மூலதனச் செலவு

36. மரவேலைத் தொழிநுட்பத்தின் பலகை வெட்டுவதற்கு வாள் பயன்படுத்தப்படுவதுடன் கூர்மையாக்குவதற்கு அரம் தேவைப்படும். கூர்மையாக்கி பிறகு அரத்தை களஞ்சியப்படுத்த முன்பு துரப்பிடித்தலை தவிர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் நுட்பமுறை,

1. அரத்தின் பற்கள் மீது கிறீஸ் பூசுதல் 2. அரத்தின் பற்கள் மீது கரித்து, வெண்கட்டி பூசுதல்
3. அரத்தின் பற்கள் மீது எண்ணெய் பூசுதல் 4. அரத்தின் பற்கள் மீது பூச்சுமம் பூசுதல்

37. பல் நோக்கு மரவேலை இயந்திரத்தை உபயோகித்து பலகை ஒன்று சீவும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற ஒருவர் விழுத்து சிறுகாயம் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பம் ஏற்படுவதற்கான செல்வாக்குச் செலுத்திய காரணம் யாது?

1. தொங்குகின்ற ஆடை அணிந்து வேலை செய்கின்றமை.
2. இயந்திரத்தை உரிய முறையில் பராமரிக்காமை.
3. தலைக்கவசம் பயன்படுத்தாமை.
4. வேலைத் தளத்தில் நெருக்கடி காணப்பட்டமை.

38. வேலைத் தளமொன்றில் எண்ணெய் கசிவுள்ள இடங்களில் அணியக் கூடிய பொருத்தமான அணிகலன் பற்றிய அவ்விடத்தின் நுழைவாயிலில் வைக்கக்கூடிய அணிகலன்,

1. 
2. 
3. 
4. 

39. ஒருநபர் மூலம் ரொடரி ஹமர் பயன்படுத்தி கொங்றீற்று தளமொன்றை துளையிடுவதற்கு முன்பு பின்பற்றக் கூடிய பொருத்தமான பாதுகாப்பு முறை,

1. இயந்திர உற்பத்தியாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுதல்
2. மதுபாணம் அருந்தி பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய மனஉளைச்சல்களை கவனத்திற் கொள்ளாமல் வேலை செய்தல்.
3. பாதுகாப்பு ஆடைகள் மற்றும் வேறு பாதுகாப்புச் செயற்பாடுகளை பின்பற்றுதல்
4. மின்வழங்கல் வடத்தில் சேதங்கள் இருந்தும் கவனத்திற் கொள்ளாமல் வேலை செய்தல்

40. வீட்டின் சுவர் ஒன்றின் மீது பூச்சுமை பூசும் போது கூடுதலான பூச்சுமை பயன்படுத்தப்படுவது காணக்கூடியதாக இருந்தது. அதற்கான காரணம்.

1. சுண்ணாம்பு பூசப்பட்ட சுவர் மீது தூரிகை மூலம் பூச்சுமை பூசுதல்.
2. சுண்ணாம்பு பூசப்பட்ட சுவர் மீது விசிறல் இயந்திரம் மூலம் பூச்சுமை பூசுதல்.
3. காரையிடப்பட்ட சுவர் மீது தூரிகை மூலம் பூச்சுமை பூசுதல்.
4. காரையிடப்பட்ட சுவர் மீது விசிறல் இயந்திரம் மூலம் பூச்சுமை பூசுதல்.

සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved]

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

88 | S | II

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, (2026) පෙරහුරු පරීක්ෂණය
கல்விப் பொதுத் தரதர பத்திர (சாதாரண தர) பரீட்சை, 2026 முன்னோடிப் பரீட்சை
General Certificate of Education (Ord.Level) Examination,(2026) Preliminary Exam

නිර්මාණකරනය හා ඉදිකිරීම් තාක්ෂණවේදය I, II
வடிவமைப்பும் நிருமாணத் தொழிநுட்பவியலும் I, II
Design & Construction Technology I, II

வடிவமைப்பும் நிருமாணத் தொழிநுட்பவியலும் II

அறிவுறுத்தல் :

- முதலாம் வினாவுக்கும் மற்றும் எவையேனும் நான்கு வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.
- முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும், தெரிவு செய்யப்பட்ட வினாக்களுக்கு பதது புள்ளிகளும் உரித்தாகும்.

1)

(i) செங்குத்தெரியமொன்றின் சமவளவுத் தோற்றம் கீழே தரப்பட்டுள்ளது.



மேலுள்ள சமவளவுத் தோற்றத்திற்கு ஏற்ப

1. அம்புக்குறி A திசையிலிருந்து முகப்புநிலைப் படத்தையும்.
2. அம்புக்குறி B திசையிலிருந்து பக்கநிலைப் படத்தையும்.
3. அம்புக்குறி B திசையிலிருந்து கிடைப் படத்தையும்.

(i) வழங்கப்பட்டுள்ள அளவீடுகளுக்கு ஏற்ப 1:1 அளவிடைக்கு முதலாம் கோண நிமிர்வரைப் பொறிமுறைக்கேற்ப வரைக. (15 புள்ளிகள்)

(ii) பக்கமொன்றின் நீளம் **40mm** மற்றும் உயரம் **70mm** கொண்ட சமபக்க முக்கோணி அரியத்தின் விரியலை வரைக. (15 புள்ளிகள்)

02. இலங்கையின் நகரப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும் மாடிக் குடியிருப்புத் தொகுதி, கடைத் தொகுதி, உள்ளசப் பயணிகள் விடுதி போன்ற பல்மாடி கட்டடங்களது நிர்மாணிப்பின் போது அவை உறுதித் தன்மையுடைய, கலையமசம் பொறுந்திய மற்றும் கவர்ச்சித் தன்மையுடையதுமாக நிர்மாணிப்தற்கு வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் பயன்படுத்தப் படுகின்றது.

(i). கொங்கிரீட்டில் அடங்கியுள்ள பிணைப்புப் பொருள் மற்றும், கட்டுமாணப் பொருட்கள் யாவை? என்பதை வெவ்வேறாக எழுதுக. (2 புள்ளிகள்)

(ii). நிர்மாணச் செயற்பாட்டின் போது வலுவூட்டப்பட்ட கொங்கிரீட்டிற்காக பயன்படுத்தப்படும் வலுவூட்டல் கம்பி வகை **மூன்றின்** வரிப்படத்தை வரைந்து அவற்றைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(iii). நிர்மாணச் செயற்பாட்டின் போது உயர் தரம் மற்றும் வினைதிறன் என்பவற்றை விருத்தி செய்துகொள்வதற்கு வினைதிறன் ொகண் உருக்குக் கம்பிகளைத் தெரிவு செய்தல் வேண்டும். அவ்வாறு தெரிவு செய்கின்ற போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் **ஐந்தை** எழுதுக. (5 புள்ளிகள்)

03. உரியவாறு பராமரிப்புச் செய்யாத கருவிகள் மற்றும் உபகரணங்களினால் கட்டட நிர்மாணிப்பு வேலை செய்யும் போது பல்வேறு விதமான விபத்துக்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

(i). வெட்டும் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் கருவிகளைக் கூர்மையாக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் **இரண்டைப்** பொயரிடுக. (2 புள்ளிகள்)

(ii). மொட்டையான கைவாள் ஒன்றை கூர்மையாக்கும் போது பின்பற்ற வேண்டிய படிமுறைகள் **நான்கைப்** பெரிட்டு அவற்றை வரிப்படங்கள் மூலம் விபரிக்குக. (4 புள்ளிகள்)

(iii).

a. கருவிகள் மற்றும் உபகரணங்கள் மூலம் மர வேலை செய்யும் போது ஏற்படக் கூடிய விபத்துக்கள் எவை என எழுதிக் காட்டுக.

b. மேலே நீர் குறிப்பிட்ட விபத்துக்கள் எற்படக் கூடிய கருவிகள் மற்றும் உபகரணங்கள எழுதி, அவற்றை தவிர்த்துக் கொள்ளும் முறைமைகளை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

04. தற்போது இடம்பெறுகின்ற காலநிலை மாற்றத் தன்மையுடன் மலைநாட்டுப் பிரதேசங்களில் மண்ணரிப்பு ஏற்படுதல் இலங்கையில் பெருமளவாகக் காணக்கூடியதாக உள்ளது.

(i). உயர் நிலத்தில் காணப்படும் சரிவான பிரதேசங்களில் ஏற்படக்கூடிய மண் கழுவிச் செல்வதை கட்டுப்படுத்துவதற்காக உடைக்கப்பட்ட கருங்கற் துண்டுகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கக் கட்டு வகை யாது? (2 புள்ளிகள்)

(ii). நிர் மேலே குறிப்பிட்ட கட்டு வகை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் **நான்கு** எழுதுக. (4 புள்ளிகள்)

(iii). கருங்கள் பயன்படுத்தி தயார் செய்யக் கூடிய இக்கட்டு வகை நிர்மாணிப்புச் செய்யும் முறையை குறிப்பிட்டு, அச்சுவர்களைக் கட்டியெழுப்புவதற்கு சாந்து பயன்படுத்தாமைக்கான காரணத்தை விளக்குக. (4 புள்ளிகள்)

05. தற்கால கட்டட நிர்மாணிப்புச் செய்ற்பாடுகளின் போது உறுதித் தன்மை வாய்ந்த அமைப்பு முறைகள் அனேகமாகக் காண்டு கொள்ளக் கூடியதாக உள்ளன.

(i) தற்கால நிர்மாணிப்புச் செயற்பாடுகளின் போது அமைப்புக்களை நிர்மாணப்பதற்கு பயன்படுத்தக் கூடிய மூலப் பொருட்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) மாணவர் விடுதி ஒன்றிற்காக வெளிப்பக்கமாக கொங்கிரீட்டினாலான நீர்த்தாங்கித் தூண் ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அந்த நீர்த் தாங்கித் தூண்களை நிர்மாணிப்பதற்கு நிர்மாணிப்பு நுட்பவியலாளர் மூலம் கவணத்தில் கொள் வேண்டிய அமைப்பின் பிரதான அடிப்படை இயல்புகள் **இரண்டை** குறிப்பிட்டு சுருக்கமாக விபரிக்குக. (2 புள்ளிகள்)

(iii) இந்த மாணவர் விடுதிக்கான நிர்மாணிக்கப்பட்ட நீர்த் தாங்கித் தூண்களின் செயற்படக் கூடிய பிரதான சுமைகள் **மூன்றைப்** பெயரிட்டு, உதாரணங்களுடன் வரிப்படம் மூலம் விளக்குக. (2 புள்ளிகள்)

06. வீடொன்றில் பயன்படுத்தப்படும் சுகாதாரம் பேணும் பொருட்களுக்கான முறையான நீர் வழங்கலும் முறையான கழிவு நீர் வெளியேற்றக் கூடியவாறும் இருத்தல் வேண்டும்.

(i) தனிநபர் பயன்பாட்டுக்கான சுகாதாரம் பேணும் பொருட்கள் இரண்டை எழுதுக. (2 புள்ளிகள்)

(ii) கட்டடம் ஒன்றுக்கு நீர் வழங்கல் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு முன்பு கவனத்தில் கொள்ள வேண்டியவிடயங்கள் **மூன்றை** சுருக்கமாக குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) வீடொன்றுக்கு நீர்வழங்கல் தொகுதி ஒன்றை அமைக்கும் போது நீர்க் குழாயை இணைக்கும் முறையை படிமுறையாகக் குறிப்பிட்டு, அந்த நீர்வழங்கல் தொகுதியை நிலைப்படத்தக் கூடிய **இரு** முறைகளைக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

07. இரட்டைக் கூரையுடைய கராஜ் ஒன்றின் தூன்களுக்கிடையிலான நீளம் மற்றும் அகலம் 6m x 6m ஆகும். மழைநீர் வளிந்தோடக்கூடியவாறு கூரைக்கு நீர்ப் பீலி பொறுத்துவதற்கு காக்கும் பலகை அடிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டது.



- கூரையின் தாள்வாரம் 1m ஆகும்
- காக்கும் பலகை ஒன்றின் அகலம் 250mm ஆகும்.
- பயிற்றப்பட்ட தொழிலாளிக்கு 02 தினங்கள் அவசியமாகும்.
- பயிற்றப்பட்டாத தொழிலாளிக்கு 02 தினங்கள் அவசியமாகும்.
- முழு செய்றபாட்டுக்குமாக சாயம் 4 லீற்றர் தேவையாகும். ஒரு லீற்றர் சாயத்தின் விலை ரூ 950.00 ஆகும்

PAST PAPERS WIKI

(i) காக்கும் பலகை அடிப்பதற்குத் தேவையான முழுப்பலகையின் அளவைக் கணிக்க. (2 புள்ளிகள்)
(உரிய அலகைக் குரிக்கவும்)

(ii) பலகை 1m நீளத்திற்கான விலை ரூ. 1250.00 ஆயின் முழுப் பலகைக்குமான செலவு யாது? (1 புள்ளி)

(iii) நாளொன்றுக்கான பயியப்பட்ட தொழிலாளிக்கான கூலி ரூ. 3000.00 உம், நாளொன்றுக்கான பயியப்படாத தொழிலாளிக்கான கூலி ரூ. 1500.00 உம் ஆகும். அவாவறாயின் மொத்தச் செலவு எவ்வளவு?
(2 புள்ளிகள்)

(iv) காக்குழும் பலகை அடித்து சாயம் பூசி வேலைய பூரணமாக முடிப்பதற்கான மொத்தச் செலவு எவ்வளவு எனக் கணிக்குக. (5 புள்ளி)

සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved]

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
Ministry of Education, Higher Education and Vocational Education

88 | S | I

கல்வி அமைச்சு

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2026 පෙරහුරු පරීක්ෂණය

General Certificate of Education (Ord. Level) Examination 2026 Preliminary Exam

Construction paper I

I paper – Answer

Question No.	Answer	Question No.	Answer
01.	2	21.	3
02.	4	22.	3
03.	1	23.	2
04.	3	24.	3
05.	4	25.	1
06.	2	26.	2
07.	1	27.	2
08.	1	28.	2
09.	4	29.	1
10.	4	30.	4
11.	2	31.	3
12.	1	32.	3
13.	1	33.	2
14.	4	34.	1
15.	4	35.	2
16.	2	36.	2
17.	1	37.	1
18.	2	38.	4
19.	2	39.	3
20.	1	40.	3

அந்தரங்கமானது

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යාපන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, (2026) පෙරහුරු පරීක්ෂණය
கல்விப் பொதுத் தரதர பத்திர (சாதாரண தர) பரீட்சை, (2026) (முன்னோடிப் பரீட்சை)
General Certificate of Education (Ord.Level) Examination, (2026) Preliminary Exam

88 - නිර්මාණකරණය හා ඉදිකිරීම් තාක්ෂණවේදය
88 - வடிவமைப்பும் நிர்மாணத் தொழில்நுட்பவியலும்
88 - Design and Constructional Technology

புள்ளித் திட்டம்



01.

i)





<u>முன்பக்கத் தோற்றம்</u>

- மறைந்த கோடுகள் 2 – 01 புள்ளி
- முன்பக்கக் கோடு - 01 புள்ளி
- முழு சுற்றுக் கோடு - 01 புள்ளி
- நடு U கோடு - 01 புள்ளி

04 புள்ளிகள்



<u>பக்கத் தோற்றம்</u>

- மறைந்த கோடுகள் 2 – 01 புள்ளி
- முன்பக்கக் கோடு - 01 புள்ளி
- முழு சுற்றுக் கோடு - 01 புள்ளி
- உள்பக்க U கோடு - 01 புள்ளி

04 புள்ளிகள்

<u>திட்டப் படம்</u>

- முழு சுற்றுக் கோடு - 01 புள்ளி
- மையச் சதுரத்திற்கு - 01 புள்ளி
- 2 செங்கோணங்களுக்கு - 02 புள்ளிகள்

04 புள்ளிகள்



- முதல் கோண முறை - 01 புள்ளி
- அளவீடுகளை குறித்தல் - 01 புள்ளி
- பெயரிடுதல் - 01 புள்ளி

03 புள்ளிகள்

இரு முக்கோணங்களுக்கு	- 2 புள்ளிகள்
இரு கோடுகளுக்கு	- 2 புள்ளிகள்
வெளிச்சட்டகத்தை நிறைவு செய்வதற்கு	- 1 புள்ளி
மொத்த மதிப்பெண்கள்	**05 புள்ளிகள்**

மேலும், மேற்கண்ட வடிவமைப்பிற்குப் பொருத்தமான வேறு ஏதேனும் சரியான வடிவமைப்பிற்கும் மதிப்பெண்கள் வழங்கவும்.

02.

i) பிணைப்புப் பொருள் : சீமெந்து
கட்டுமாணப் பொருள் : கல், மணல்

(02 புள்ளிகள்)

ii)



மெண்ணுருக்கு

6mm



நரம்புருக்கு

10m,12mm



முறுக்கப்பட்ட உருக்கு

10mm,12mm,25

(03 புள்ளிகள்)

iii)

- துருப்பிடித்தல் தொடர்பாக
- பகுதிகள் வெடித்திருத்த
- எண்ணெய், கிரீஸ் போன்றன பூசுதல்
- வடிவம் விகாரமடைந்து காணப்படல்.
- குறுக்குவெட்டுப் பரப்பு மாற்றமடைதல்
- உற்பத்திக் குறைபாடு காணப்படல். (05 புள்ளிகள்)

(02+03+05=10 புள்ளிகள்)

03.

i) அர வகை, மணற்கல், நேர்த்தியாக்கல் இயந்திரம், பல்விழத்தி குறடு, காபரன்ரம் கல்
(இவற்றுள் 2 எழுதியிருப்பிக் 02புள்ளிகள்)

ii)

- வாட்பல் உயரத்தை மட்டமாக்குல்



- மாறுபட்ட வடிவமுள்ள பற்களை உரிய நிலைக்கு வடிவமைத்தல்.



- வாட்பல் தொற்றுடல்



- கூர்மையாக்குதல்



(04 புள்ளிகள்)

Past Papers Wiki

iii)

a) கை வெட்டுதல், கை தகருதல், மின் அதிர்ச்சி ஏற்படல், கண்களுக்கு சேதம் ஏற்படல்.

b) கை வாள் - உரிய முறைக்கு கொடுத்தல்
வெட்டும் இயந்திரம் - வெளிப்புற கவசங்களை அகற்றாமல் இருத்தல்.
கோண சாணைக் கல் - கண் பாதுகாப்புக் கண்ணாடி
உளி – உரிய முறையில் பயன்படுத்துதல். (04 புள்ளிகள்)

(2+4+4=10 புள்ளிகள்)

04.

i) தெபியன் தடுப்புச் சுவர் (02 புள்ளிகள்)

ii) ஆறுகள் சார்ந்நத, கடல் சார்ந்த, எல்லைச் சுவர் ஓடைகள், சாய்வு கூடிய நிலமேற்பரப்பு, கட்டிட செயற்பாடகள். (04 புள்ளிகள்)

iii) கல்வனைஸ் படுத்திய இரும்புக் கம்பி அல்லது PVC கவசமிடப்பட்ட அல்லது உலோகக் கம்பி, பின்ன்ப்பட்ட கம்பிவலை கருங்கல் துண்டுகளை இட்டு இடைவெளி இல்லாமல் அடுக்கப்பட்டு வலைக் கூட்டினைக் கொண்டு சுவர் நிர்மாணிக்கப்படுகின்றது.

இந்த கெபியின் ஊடாக கருங்கல் கொண்டு அடுக்கப்பட்ட இலகுவாக நீர் வழிந்து செல்லக் கூடியவாறு தயாரிக்கப்பட்டிருப்பதால் சாந்து பயன்படுத்ததபல் படாமல் மதில்கள் இட்டு நீரின் அமுக்கத்தை குறைக்கின்றது. (04 புள்ளிகள்)

05.

i) கொங்கிரீட்டு, உலோக வகை, மர வகை (02 புள்ளிகள்)

ii) ● உறுதி – தாங்கியில் நீர் கொள்ளளவு உயர் மட்டத்தை அடைந்த பிறகு ஆடாமல் அசையாமல் தாக்குப் பிடிக்கும் இயல்பு
● நிலைப்பாடு – கொள்ளளவு அதிகரிக்கும் போது வடிவம் மாறாமல் இருத்தல்.
● நீடித்த உழைப்பு – நீண்ட காலப் பாவனை
● வடிவம் – அழகான முடிப்பு
● பாதுகாப்புத் தன்மை அமப்பு மூலம் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் பயன்படுத்துபவர்களுக்கும் ஆபத்த இல்லாது இருத்தல்.
● உயர் தரம் (02 புள்ளிகள்)

iii) மாயச் சுமை – கொங்க்ரீட், இரும்பு, மரம்
உயிர்ச் சுமை – கலஞ்சியப் படுத்தப்பட்டுள்ள நீர்
சூழல் சார் சுமை – வானிலை மாற்றங்கள் (காற்று, மழை) (03 புள்ளிகள்)



(03 புள்ளிகள்)

06.

i) கழுவும் தொட்டி, மலசல கூட தொட்டிகள் (கழிவுத் தொட்டிகள்), குளியல் நீர்ப பொழியி
(பொருத்தமான விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் 1 புள்ளி வழங்குக)

ii)

- நீரைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தேச மறை.
- நீர்க் குழாய்த் தொகுதியை அமைப்பதற்கான முறை
- நீர்த் தொகுதிக்கு வால்வுகள், திருகு பிடிகள், துணைப்பகுதிகளை அறிந்த கொள்ளல்.
- ஒவ்வொரு இடத்திற்கும் பயன்படுத்தும் குழாய்களின் விட்டம், அமுக்கம் பற்றி அவதானித்தல்.
- பகிரக் கூடிய நிரின் கொள்ளவு உரிய முறையில் பகிரக் கூடிய தளம்.

(பொருத்தமான விடயங்களுக்கு 03 புளளிகள் வழங்குக)

iii)

- வெட்டுதல்
- விளிம்புகளை சுத்தம் செய்தல்
- திரவ சீமெந்துப் பசை பூசுதல்
- பொருத்ததல்
- உலர்த்துதல்
- உரிய நிலைப்படுத்ததல். .

நிலைப்படுத்தல் முறைகள்

- நிலத்தில் காண் தோண்டி அதன் உள்ளே அமைத்தல்.
- கிளிப் மூலம் ஆதாரம் ஒன்றில் பொருத்துதல்.
- கொங்கிரீட் / செங்கற் சுவர் இடையில் அமைத்தல்
- கம்பிகளின் மூலம் தூக்கி அமைத்தல்

(படிமுறையுடன் குறிப்பிடப்பட்டிருப்பின் 05 புள்ளிகள்)

07.

i) இரு பக்கங்களுக்கும் தேவையான பலகை = 2(6m + 2m)
= 16m

(02 புள்ளிகள்)

ii) பலகைக்கான மொத்த செலவு = ரூ 1250 x 16
= ரூ 20,000.00 (01 புள்ளி)

iii) பயிற்றப்பட்ட ஊழியர் கூலி = ரூ 3,000.00 x 2
= ரூ 6,000.00

பயிற்றப்படாத ஊழியர் கூலி = ரூ 1,500.00 x 2
= ரூ 3,000.00

மொத்த செயற்பாடுகளுக்குமான செலவு = ரூ 6,000 + ரூ 3,000
= ரூ 6,000.00

iv) பூச்சு மைக்கான செலவு = ரூ 950 x 4
= ரூ 3,800.00

மொத்தச் செலவு = ரூ 20,000.00 + ரூ 9,000.00 = ரூ 3,800.00
= ரூ 32,800.00

(05 பள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank